1989 பிப்ரவரி 21] [திரு. இரா. மோகன்]

பிரச்சினை அது. 30க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் மூடப் பட்டிருக்கின்றன. அவற்றைத் திறப்பதற்கு பேச்சுவார்த்தை இந்த மாத இறுதிக்குள் நடத்த இருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் அறிவித்திருக் கிறார்கள். என்றைக்குப் பேச்சு வார்த்தை நடத்தப்பட இருக் கிறது? யார் யாரை அழைத்துப் பேச இருக்கிறீர்கள், எங்கு பேச்சு வார்த்தை நடைபெறப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம், ஆயிரக்கணக்கான தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆலைகள் ஆண்டுக் கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன; பல பஞ்சாலைகள் மாதக் கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள், தெரிவித்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்று நிறைவுநாள் என்ற காரணத்தாலே மூடிய ஆலைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருது கிறார். மூடிய ஆலைகள் 30 அல்ல. சமீபத்திலே எடுக்கப் பட்ட கணக்கின்படி 25 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே வேலையில்லாமல் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக் கெல்லாம் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற அடிப் படையில் இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறது. வருகிற 25 ஆம் தேதி தொழிற்சங்கத் தலைவர்களையும், நிர்வாகத்தையும் அழைத்து, சென்னையிலே பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது. தொடர்ந்து இந்த அரசு மூடிய ஆலை களைத் திறப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) கல்லணைக் கால்வாயிலிருந்து தண்ணீர் விடவேண்டியதன் அவசியம்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவரவர்களே, நான் மிக அவசரமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள் அதை 56-வது விதியின்கீழ் மாற்றி இருக்கிறீர்கள். அது சபையில் வரவில்லை. அது மிக மிக அவசரமான விஷயம். அங்கே "காரிப்" பயிர்கள் கருகிக்

கொண்டிருக்கின்றன. கல்லணைப் பகுதியில் பேராவூரணி, பட்டுக்கோட்டை, திருவோணம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிர்கள் கருகிக் கொண்டிருக்கின்றன. நெற் கதிர்கள் பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் மிக அவசரமாகத் தண்ணீர் வேண்டுமென்று அன்றே பேசினேன். அதற்கு பதில் இல்லை. 16-ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கும் பதில் இல்லை. அதை 56-வது விதியின்கீழ் மாற்றினீர்கள். அதற்கும் பதில் இல்லை. அந்த கல்லணை கால்வாயில் தண்ணீர் விடப்படுமா ? எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்போகிறார்கள் ? கொடுக்க முடியுமா ? முடியாதா ? இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பகுதியில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தந்தி மேல் தந்தி அனுப்புகிறார்கள். தயவுசெய்து விரிவான அறிக்கை தர அன்புடன் வேண்டுகிறேன். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் எல்லாம் போன் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொன்னால் விடை வரும். விளக்கமாகச் சொன்னால் அனுமதியே வராது. (குறுக்கீடு) உங்களுடைய கேள்வி அனைவருக்கும் புரிகிறது. விடை வருகிறது.

* மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அங்கத்தினர் இந்த அவையில் கல்லணைக் கால்வாயில் தண்ணீர் விடப்படுமா என்று கேட்டபோது அப்போதே ஒரு மணி நேரத்திற்குள் அதிகாரிகளோடு கலந்து பேசி, அந்தப் பகுதியில் தண்ணீர் விடப்படும் என்று தெரிந்ததும், நானும் அங்கத்தினர் அவர்களை அழைத்து, நாங்கள் பேசிய பிறகு நான் சேகரித்த விவரம் இது என்று உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். 3 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் திறந்துவிட இருக்கிறோம். அது கடைமடைப் பகுதிக்கு வர காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். எப்படியும் தண்ணீர் வரும்.

(ஐ) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் பாதிப்பு.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, நேற்றைய தினம் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மதுரை மாவட்டத்தில் சுமார் 28,000 ஹெக்டேர் நிலத்தில், தண்ணீர் இல்லாத காரணத்தால், பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன ; அங்கேயுள்ள